Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 20 வெள்ளிக்கிழமை (06.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:311

# சு.க. - ஐ.தே.க. பேச்சுகள் வெற்றி

# விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை

## நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் இணைந்து செயற்பட முடிவு

கொழும்பு, ஒக்ரோபர் 06

**தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பாக ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே இடம்பெற்ற மூன்று சுற்றுப்பேச்சுகளும் வெற்றியளித்துள்ளன.**

**இரு கட்சிகளும் சேர்ந்து அமைக்கவுள்ள நிறைவேற்றுக் குழு ஒன்று விரைவில் பொது இணக்கப்பாடு தொடர்பான கூட்டறிக்கை ஒன்றைத் தயாரித்து வெளியிடவுள்ளன.**

**இணக்கம் கண்ட ஆறு முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்த இரண்டு கட்சிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றையும் செய்துகொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தீர்வை எட்டுவதற்காக இரு பிரதான கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு இரு கட்சிகளிடையே இடம்பெற்றுவந்த மூன்று சுற்றுப் பேச்சுகள் வெற்றியளித்துள்ளன எனவும் நாடாளுமன்றிற்குள்ளும், வெளியேயும் ஒன்றிணைந்து செயற்பட இருகட்சிகளும் தீர்மானித்துள்ளன என்றும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் மூன்றாம் சுற்றுப் பேச்சு இடம்பெற்றது. அதனையடுத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்து இரு கட்சிகளினதும் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

அப்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படமுடிந்தமையானது நல்லதோர் அரசியல் கலாசாரத்தை நாட்டில் தோற்றுவிக்கும் முதற்படியாகும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்

கொழும்பு, ஒக்.6

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகள் பெரும்பாலும் இன்று வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களத்தில் உள்ள மின்பிறப்பாக்கியில் ஏற்பட்ட பழுது காரணமாக முடிவுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும்-

நேற்று நள்ளிரவு முடிவுகளை இணையத்தளத்தில் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் - அவர் தெரிவித்தார்.

எனினும் நேற்று நள்ளிரவு வரை இணையத்தளத்தில் பரீட்சை முடிவுகள் வெளியாகவில்லை. (1)

## தொடர்ந்து தமிழ்க் கூட்டமைப்பு சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஒக்.6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நடாளுமன்றின் மையத்தில் மேற்கொண்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆறாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

வழமைபோல் நேற்றுக்காலை பத்து மணியளவில் ஆரம்பமான அவர்களது போராட்டம் சபை நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில், நேற்று சபை நடவடிக்கைகள் முடிவடையும் வரை தொடர்ந்தது.

அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோதிலும் அவ்வப்போது தங்கள் ஆசனத்திற்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஒக். 28-29 இல் சுவிற்ஸர்லாந்தில் பேச்சு நடத்த அரசுத்தரப்பு யோசனை

### நோர்வேத் தூதரிடம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

கொழும்பு,ஒக்.6

உத்தேச சமாதானப் பேச்சை எதிர்வரும் 28-29 ஆம் திகதிகளில் சுவிற்ஸர்லாந்தில் நடத்துவதற்கு அரச தரப்பு இணங்கியுள்ளது. இதனை அரச தரப்புப் பேச்சுக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் ஸ்ரீ பாலடி சில்வா நேற்று நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவரிடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துவிட்டார்.

புலிகளுடனான பேச்சுக்களை ஜெனிவாவில் நடத்துவதற்கே அரசு விரும்புகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக அரச தகவல் திணைக்களம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஒக்ரோபர் 28, 29ஆம் திகதிகளில் சுவிற்ஸர்லாந்தில் நடத்தப்படவேண்டும் என்று அரசு ஆலோசனை தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுத் தொடர்பாக நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்த கருத்துக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவை உறுப்பினர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளார்.

சமாதானப் பேச்சுத் தொடர்பான அடிப்படை விடயங்கள் பற்றிப் பேச புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளதைக் கருத்தில்கொண்டு பேச்சுக்கான இடத்தையும் நாளையும் அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இதுபற்றி நோர்வேயின் விசேட தூதரிடம் நிமால் ஸ்ரீபால டி சில்வா நேற்று வியாழக்கிழமை தெளிவாக எடுத்துக் கூறினார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## நாலாம் கட்ட விநியோகத்தில் சகலரும் பொருள்களைப் பெறலாம்

### அரச அதிபர் அறிவுறுத்து

குடாநாட்டில் தற்சமயம் இடம்பெறும் நாலாம் கட்ட உணவு விநியோகத்தின்போது சகலரும் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

நிவாரணம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள், சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்கள் உட்பட சகலரும் பணத்திற்கு நாலாம் கட்ட விநியோகத்தில் பொருள்களைப் பெறலாம் என்றும் -

நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களுக்கு அடுத்த கட்டத்தில் நிவாரணம் வழங்கப்படும் என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

நாலாம் கட்ட விநியோகத்திற்காக 4 ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்கள் ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அவை தமக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களை களஞ்சியத்தில் இருந்து பெற்று விநியோகத்தை உடன் ஆரம்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர் என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (1-79)

## பேச்சு நிலைவரத்தை விளக்க போவர் புதுடில்லி சென்றார்

கொழும்பு, ஒக்.6

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை ஏற்பாடு செய்வதற்காக இலங்கைக்கு வந்திருந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஹன்ஸன் போவர் நேற்று கொழும்பில் இருந்து புதுடில்லி பயணமானார்.

இணைத்தலைமைகள் பரிந்துரைத்தவாறு பேச்சை ஆரம்பிப்பது குறித்து கொழும்பில் அரசுத் தரப்புடனும் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்களை நடத்திய போவர், இந்தப் பேச்சுக்களின் பெறுபேறுகளை இந்திய அதிகாரிகளுக்கு விளக்குவதற்காகவே புதுடில்லி புறப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு சொந்தமான யு.எல்.115 இலக்க விமானத்தில் போவர் இந்தியாவுக்குச் சென்றார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில தினங்களாக அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்ட அவர் இரண்டு தரப்பினரும் பேச்சுக்கான இடம், திகதி என்பவற்றை தீர்மானிக்க தகவல்களைப் பரிமாறினார். (க)

## அவசரகாலச் சட்டம் நிறைவேறியது

கொழும்பு,ஒக்.6

அவசரகாலச் சட்டம் 106 வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. இதன்படி நடைமுறையில் இருக்கும் இச்சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையை பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தைத் தொடக்கிவைத்தார். மாலை 5 மணி வரை அதன் மீதான விவாதம் நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வாக்கெடுப்பைக் கோரினார்.

அதன்படி வாக்கெடுப்பு நடைபெற்றது. ஆதரவாக 106 வாக்குகளும் எதிராக 20 வாக்குகளும் அளிக்கப்பட்டு இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆளுங்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன இச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மேலக மக்கள் முன்னணி ஆகியன எதிராக வாக்களித்தன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் கைத்தொலைபேசி சேவைகள் தொடர்ந்து துண்டிப்பு

### ஆயிரக்கணக்கான பாவனையாளர்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக்.6

குடாநாட்டில் கைத்தொலைபேசிச் சேவைகள் தொடர்ந்து துண்டிக்கப்பட்டிருப்பதால் பல்லாயிரக்கணக்கான கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

கைத்தொலைபேசி வசதியையும் அவற்றை வழங்கும் நிறுவனங்கள் மீதான நம்பிக்கையையும் பாவனையாளர்கள் இழந்துள்ளனர் என்று 'கொழும்பு பேஜ்' இணையச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் [illegible] குடாநாட்டில் மோதல் ஆரம்பமாகியது முதல் கைத்தொலை பேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

முகமாலை முன்னரங்க நிலைகள்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தவுடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக இணைப்புகளைத் தற்காலிகமாகத் துண்டித்து விடுமாறு அரசு, சம்பந்தப்பட்ட கைத்தொலைபேசி நிறுவனங்களிடம் கேட்டுக்கொண்டது. அப்போது முதல் இந்த இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் பல்லாயிரக்கணக்கான கைத்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர்களின் பிரதேசங்களை விட்டு அரசாங்கம் வெளியேறிவிட வேண்டும்

## அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் காட்டம்



கொழும்பு,ஒக்ரோபர் 6

**அரசாங்கத்தால் தமிழர்களைச் சரியான முறையில் கவனிக்க முடியாவிட்டால் எங்கள் பிரதேசங்களை விட்டு அரசு வெளியேறி விடவேண்டும்.**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் காட்டமாகத் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது:-

அரச படையினர் வடக்கு - கிழக்கில் தமிழர்கள் மீது மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்கள் - அட்டூழியங்கள் போன்றவை அதிகரித்துவிட்ட நிலையில் - தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, அரச படையினர், வடக்கு - கிழக்கில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும். தமிழர்களை அவர்கள் பாட்டில் நிம்மதியாக வாழ அனுமதிக்க வேண்டும்.

''வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கை பெரும் எடுப்பில் நடைபெறுகிறது. தமிழர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இந்நடவடிக்கை காரணமாக ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தும், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். பொருள் சேதமும் படையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த தமிழர்கள் மீளக் குடியமர முடியாமல் உள்ளனர். மூதூர் கிழக்கில் இடம்பெயர்ந்த தமிழர்கள் மீளக்குடியமரவில்லை.

**2 லட்சத்து 60 ஆயிரம் பேர் உள்ளக ரீதியாக இடம்பெயர்வு**

அப்பிரதேசத்தில் தமிழர்களின் உடைமைகள் திருடப்படுகின்றன. 2 லட்சத்து 60 ஆயிரம் பேர் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்துள்ளனர். இந்தியாவுக்கு 50 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவை தவிர, தமிழர்கள் தினமும் கடத்தப்பட்டுக் கொல்லப்படுகின்றனர். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வெள்ளை வான்களில் வருபவர்கள்தான் இவ்வாறு தமிழர்களைக் கடத்திச் சென்று கொலை செய்கின்றனர்.

மாணவர்கள், தொழிலாளர்கள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவிலியன்கள் என அனைவரும் கொல்லப்படுகின்றனர். கொலையாளிகளில் ஒருவரையேனும் அரசு கைது செய்யவில்லை. கொலைப் படலம் தொடர்கிறது.

வெள்ளை வானில் வருபவர்கள் இவற்றையெல்லாம் செய்து விட்டு இராணுவச் சோதனைச் சாவடி ஊடாகத் தப்பிச் செல்கின்றனர்.

இவ்வருடம் ஜனவரி மாதம் 5 தமிழ் மாணவர்கள் திருமலையில் கொல்லப்பட்டனர். இதை ஜனாதிபதியிடம் முறையிட்டோம். கொலையாளிகளைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்தார்கள் என எமக்கு ஜனாதிபதியும், பொலீஸ் மா அதிபரும் உறுதியளித்தனர். ஆனால், அதற்கான எந்த முயற்சிகளும் நடைபெறவில்லை.

ஓகஸ்ட் 4 இல் திருமலையில் 17 தொண்டு நிறுவன ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனுடன் தொடர்பட்ட எவரையும் கைது செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

**ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை**

இவர்களின் கொலை தொடர்பாக விசாரணை நடத்த சிவில் சமூகத்தவர்கள் உள்ளிட்ட சர்வதேச ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என ஜனாதிபதி கூறியிருந்தார். கடந்த மாதம் 8 ஆம் திகதி இச்செய்தியை 'ஹிந்து' பத்திரிகை வெளியிட்டது. ஆனால், ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. இக்கொலை தொடர்பாக விசாரணை நடத்த சர்வதேச ஆணைக்குழு வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. அதனால், சர்வதேச ஆணைக்குழுவால் இலங்கைக்கு வர முடியாத நிலையுள்ளது என அரசு தெரிவிக்கின்றது. உண்மை அம்பலமாகி விடும் என்பதால்தான் அரசு இப்படிச் சொல்கிறது.

அரசு யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக மீறிவிட்டது. தொடர்ச்சியான ஷெல், வான் தாக்குதல்களைத் தமிழர் பகுதிகளில் மேற்கொண்டதன் மூலம் இதை மீறியிருக்கின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை முறிவடைந்தமைக்கு ஜெனிவாப் பேச்சின் தீர்மானத்தை அரசு நடைமுறைப்படுத்தத் தவறியமையும் ஒரு காரணம். சர்வதேச நாடுகள் இதை ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்த நிலையில் செம்மணி விடயம் என்ன வாயிற்று? 400 முதல் 500 தமிழர்கள் கொலை செய்யப்பட்டு அங்கு புதைக்கப்பட் டுள்ளனர். அதற்கான விசாரணை நடத்தப்படும் என அரசு கூறி அதை அப்படியே நிறுத்திவிட்டது. பிந்துனுவெவ சம்பவமும் அவ்வாறேதான் ஆனது. தமிழர்கள் கொலை செய்யப்படும்போது மட்டும் விசாரணை நடத்தப்படுவதில்லை. அல்லது விசாரணை இடையில் நிறுத்தப்படுகிறது.

**தமிழர்கள் மீது அடக்குமுறை**

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறவில்லை என நாம் சொல்லவில்லை. ஆனால், அரசு மீறிய விதம் படுமோசமானது. தமிழர்கள் மீது அடக்குமுறையை அரசு மேற்கொண்டுள்ளது.

சர்வதேசப் பணியாளர்கள் தமிழர் பகுதிகளில் சென்று பணியாற்ற அரசு தடை விதிக்கின்றது. தமிழர்களின் நிலையை சர்வதேசம் கண்டுவிடும் என்று அரசு நினைக்கிறது. தமிழர்களுக்குச் சேவை செய்யக் கூடாது, அவர்கள் கஷ்டப்பட வேண்டும் என்றே அரசு கருதுகிறது போலும்.

தமிழர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். அத்தியாவசியத் தேவைகள் இன்றி மரத்தின் கீழ்தான் அவர்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும் அதற்கான பொருள்களைத் தமிழ்ப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லவும் அரசு தடை விதிக்கின்றது.

கதிரவெளி, வாகரை போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கூடாரங்களை அமைத்துக்கொடுக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் தயாரான போதும் அரசு அதனைத் தடைசெய்கிறது. இப்பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு சுகாதார வசதிகள் இல்லை. தொற்று நோய் பரவும் அபாயம் தென்படுகிறது. சர்வதேச பணியாளர்களை அங்கு செல்ல அனுமதித்தால் இப்பிரச்சினை தீர்க்கப்படும்.

யாழில் மக்களுக்கு உண்ண உணவில்லை. வர்த்தகர்கள் மாத்திரம் ஓரளவு இத்தேவையை நிறைவேற்றுகின்றனர். இருந்தும் அவர்களால் பொருள்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்ல முடியாதுள்ளது. கப்பலில் அனுப்பப் ப டுகின்ற பொருள்களின் அளவும் போதாது. தமிழ்மக்களைப் புறக்கணித்து அரசு இவ்வாறு செயற்பட ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினருமே காரணம்.

**எல்லாத் தமிழ் மக்களும் டக்ளஸ் தேவானந்த அல்லர்**

இவர்கள்தான் ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்பையும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையையும் தடை செய்தனர். இவை வழங்கப்பட்டிருந்தால் பிரச்சினை தீர்ந்திருக்கும்.

இவர்கள் நோர்வேத் தூதரகம் முன்பாகச் சென்று நோர்வேயினரை விரட்டுகின்றனர். சமாதானப் பேச்சு வேண்டாம் என்கின்றனர். இந்த நிலையில் எப்படி சமாதானத்தைப் பற்றி அரசு பேச முடியும். ஏன் அரசு எம்மை எம் பாட்டில் விடக் கூடாது. அரசால் எங்களைச் சரியான முறையில் கவனிக்க முடியாவிட்டால் அரசு எங்கள் பிரதேசங்களை விட்டு வெளியேறிவிட வேண்டும்.

இது புலிகளுக்கு எதிரான போராட்டம் எனக் கருதி தமிழ் அப்பாவி மக்களைக் கொலை செய்கிறது அரசு.

**தமிழர்கள் தன்மானம் உள்ளவர்கள்**

எம்மை அடிமையாக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. எல்லாத் தமிழர்களும் டக்ளஸ் தேவானந்தா அல்லர் என்பதை அரசு விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழர்கள் தன்மானம் உள்ளவர்கள். தமிழர்கள் மீது அரசு மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கை நிச்சயம் நீண்ட காலம் நீடிக்காது. ஜயந்த தனபால, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்குத் தகுதியானவராக இருந்தும் கூட அவரால் வெற்றிபெற முடியாமல் போனது. சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு நல்லதொரு பெயர் இல்லாமையே இதற்குக் காரணம். இதை அரசு உணர்ந்து செயற்பட வேண்டும்.'' - என்றார்.

# புலிகள் மீதான பதில் தாக்குதல் தொடரும் அமைதிப் பேச்சிலும் அரசு தீவிரம் காட்டும்!

## பிரதமர் ரட்ணசிறி கூறுகிறார்



கொழும்பு, ஒக்.6

''தமிழீழ விடுதலைப்புலிகள் அரச படையினர்மீது மேற்கொண்டு வரும் மிலேச்சத்தனமான தாக்குதல்களை முறியடிக்க அரசு தொடர்ந்தும் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தும். ஆனால் அதே வேளை, அமைதிப்பேச்சைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளையும் தீவிரமாக மேற்கொள்ளும்''.

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையை சமர்ப்பித்து, அதன் மீதான விவாதத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றும்போது கூறினார்.

அங்கு மேலும் அவர் தெரிவிக்கையில் -

புலிகள் தொடர்ச்சியாகப் படையினர்மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். படகுகள் மூலம் வந்து கடற்படையினரைத் தாக்க அவர்கள் முயற்சித்தனர். இது மாத்திரமின்றி பல தாக்குதல் நடவடிக்கைகளைப் புலிகள் மேற்கொண்டனர். அத்தனை நடவடிக்கைகளையும் படையினர் முறியடித்துவிட்டனர்.

படையினரின் பதில் தாக்குதல்கள் காரணமாகப் புலிகள் மிகவும் பலவீனமடைந்துள்ளனர். அவர்களின் பல யுத்த தந்திர நடவடிக்கைகள் தோற்கடிக்கப்பட்டன.

கடந்தமாதம் இடம்பெற்ற தாக்குதல் காரணமாக 79 படையினர் கொல்லப்பட்டதோடு 470 படையினர் காயமடைந்தனர். 114 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 83 பொதுமக்கள் காயமடைந்தனர்.

புலிகள் இடைவிடாது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். படையினரை மாத்திரமின்றி பொதுமக்களையும் அவர்கள் கொலை செய்கின்றனர். அண்மையில் பொத்துவிலில் 10 முஸ்லிம்கள் புலிகளால் கொல்லப்பட்டமை இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

இந்த நிலையில் மூவின மக்களையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. அதன் காரணமாகவே அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

புலிகள் மேற்கொள்ளும் தாக்குதலை முறியடிக்க பதில் தாக்குதல் நடத்தப்படும்அதேவேளை, அமைதிப்பேச்சை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். - என்றார். (க)

# அவசரமாக இரத்தம் தேவை

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'ஏ' நெக்கட்டிவ்', 'ஓ நெக்கட்டிவ்' இரத்த வகைகள் அவசரம் தேவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு வகைகளையும் சேர்ந்த இரத்தம் உடையவர்கள் உடன் இரத்த வங்கிங்கு வந்து இரத்ததானம் வழங்கும்படியும் -

தமது இரத்தத்தின் வகையைத் தெரியாதவர்களும் இரத்த வங்கிக்கு சமுகம் அளித்து இரத்தப் பரிசோதனையின் பின் குறிப்பிட்ட வகையான இரத்தம் எனில் இரத்ததானம் செய்யமுடியும் என்றும் - இரத்த வங்கி அதிகாரிகள் கேட்டுள்ளனர். (1)

# முருங்கனில் கிளைமோர் மீட்பு!

கொழும்பு,ஒக்.6

மன்னார் - மதவாச்சி வீதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் 10 கிலோகிராம் நிறையுடைய கிளைமோர் குண்டு ஒன்றை முருங்கன் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்தே இக் கிளைமோர் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமென முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அநுராதபுரம், நொச்சியாகம பகுதியில் மேலும்சில வெடிபொருள்கள் மீட்கப்பட்டிருக்கின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதியினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 2 சிறியரக கிளைமோர் குண்டுகளும் சிறு ஆயுதவகைகளும் மீட்கப்பட்டன என்று அநுராதபுர சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (த)

# நானாவித பாவனைப் பொருள்களும் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.6

குடாநாட்டுக்கு 2ஆயிரத்து 800 மெற்றிக் தொன் அத்தியாவசிப் பொருள்களுடன் வந்துள்ள 'யால' என்ற கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இக்கப்பலில் அரிசி, சீனி, பருப்பு, உழுந்து கொத்தமல்லி, உள்ளி, தேங்காய் எண்ணெய், தீப்பெட்டி, சவர்க்கார வகைகள் உட்பட பல பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

திருகோணமலையில் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் 'ஹிண்ட்' என்ற கப்பல் அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது என்றும் -

அக்கப்பலில் அரிசி,சீனி, மா ஆகியவற்றுடன் செத்தல் மிளகாய், கொத்தமல்லி, உள்ளி ஆகியனவும் எடுத்துவரப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (1)

# கல்கிஸை நீதிமன்றில் குண்டுப்புரளி!

கல்கிஸை நீதிமன்றத்தில் குண்டு இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து மோப்ப நாய்களுடன் அங்கு விரைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இத் தேடுதல் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்டது.

அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றின் ஊடாகவே இந்தத் தகவல் பொலிஸாருக்கு கிடைத்திருக்[illegible] நீதிமன்றுக்கு விரைந்தனர். நீதிமன்ற அ[illegible] தேடுதல் நடத்தப்பட்டது.

மோப்பநாய்கள், குண்டு அறியும் கருவிகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதலின் முடிவில் வெடிகுண்டுகள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை.(த)

# பாண் விலை உயர்வு

கொழும்பு,ஒக்.6

நாடளாவிய ரீதியில் பாணின் விலை நேற்றுமுன்தினம் தொடக்கம் 2 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் பராக்கிரம தஸநாயக்க தெரிவித்தார்.

பிறிமா நிறுவனம் ஒரு கிலோ கிராம் மாவின் விலையை 4 ரூபாவால் அதிகரித்ததையடுத்தே பாணின் விலை 2 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# அரசியல் அதிகாரப் போட்டிக்கு இனவாதத்தைப் பற்றி நிற்கும் தெற்கு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான விரிசல் ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது. உடனடி ஒட்டுறவுக்கு வாய்ப்புகள் அடியோடு குறைந்து விட்டன.

இதுவரை பௌத்த - சிங்கள மேலாதிக்கப் போக்கையும், பேரின வாதத்தையும் கக்கியபடி, அதில் அரசியல் குளிர் காய்ந்த ஜே.வி.பி., இனி, தனித்து நின்று அரசியல் நடத்துவதற்காக முற்றும் முழுதாகப் பேரினவாதத்தை முழு மூச்சில் கிளப்பும் என எதிர்பார்க்கலாம். அதற்கான கைங்கரியங்களும் ஏற்கனவே ஆரம்பித்து விட்டன.

ஜே.வி.பியுடன் சமரசம் செய்து கொள்ளும் தமது எத்தனம் பலிக்காத நிலையில், இனி தென்னிலங்கையில் அக்கட்சி கிளப்பப் போகும் பேரினவாத எழுச்சிக்கு முகம் கொடுத்தபடி, அமைதி முயற்சிகளை அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறு முன்நகர்த்தப் போகின்றார் என்பதே முக்கிய கேள்வி.

தெற்கில் தன்னுடைய அரசியல் ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்காக ஜே.வி.பி., ஜாதிஹ ஹெல உறுமய போன்ற வற்றை விட அதிகம் தீவிரமான சிங்களத் தேசியவாதி என்று தன்னை வெளிப்படுத்திக் காட்ட ஜனாதிபதி விரும்புவாரா, அதற்காக அமைதி முயற்சிகளை கடுங்கோட்பாட்டு சிங்களத் தேசியப் போக்கில் அணுகி, சமாதான எத்தனங்களைப் போட்டுடைப்பாரா என்பதும் தெரியவில்லை.

அமைதிப் பேச்சுகளுக்கான வாய்ப்பு மீண்டும் கருக் கட்டி உள்ளது. இச்சமயத்தில் அந்த அமைதி எத்தனங்களுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய தரப்புகளுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளும் அரிய வாய்ப்பு அரசுத் தரப்புக்குக் கிடைத்திருப்பது அந்த அமைதி எத்தனங்களை ஆரோக்கியமான திசையில் நகர்த்துவதற்கு நன்கு உதவும் என்பதே நடுநிலையாளர்களின் கணிப்பு ஆகும்.

யுத்த முனையில் ஒரு சில இராணுவ வெற்றிகளை அரசுப் படைகள் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றன என்று பெருமிதம் கொள்ளும் சில அரச உயர் வட்டாரங்கள், அதன் காரணமாக இராணுவச் சமவலு நிலை இப்போது அரசுப் படைகளுக்கு சார்பாகத் திரும்பியுள்ளது என்று கருதுகின்றன.

இந்தச் சார்பு நிலையை சாதகமாகப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் முதுகை மேலும் முறிக்க வேண்டும், அவர்களை அடியோடு பலவீனப்படுத்த வேண்டும், அதன் காரணமாக மண்டியிடும் தமிழர் தரப்பு மீது சிங்களம் விரும்பும் தீர்வுத் திட்டத்தை வசதி யாகத் திணிக்க வேண்டும் - என்றெல்லாம் அவ்வட்டாரங்கள் கருதுகின்றன போலும்!

இந்தச் சிந்தனையின்படி செயற்பட்டால், ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றின் பின்னால் இனவாத அடிப்படையில் அணி திரளும் தென்னிலங்கை அரசியல் சக்திகளையும் தம்பக்கம் வளைத்துப் போட்டு, அந்த இரு கட்சிகளையும் ஓரங்கட்டி, தனது கட்சி தனித்துத் தேற வழி செய்து விடலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கணக்குப் போடக் கூடும்.

பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகள் தம்மை விட்டு விலகும் நிலைமை உறுதியாகி வருகின்ற இந்தச் சூழ்நிலையில் -

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அந்தச் சக்திகளின் பின்னால் அணி திரண்டு நிற்கும் தென்னிலங்கைக் கடும் கோட்பாட்டாளர்களின் ஆதரவைத் தன்பக்கம் இழுப்பதற்காக அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்பை அரசுத் தலைவர் எட்டி உதைப்பாரா? அல்லது பேரினவாத சக்திகள் தம்மை விட்டு விலகுவதால் - அச்சக்திகளின் பிடி தளரும் நிலையில் - அமைதி முயற்சிகளை முன்னெடுத்து, தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் நிரந்தர - நிலையான - தீர்வு ஒன்றை அவர்களுக்கு வழங்கி, அதன் மூலம் இலங்கைத் தீவின் சுபீட்சத்துக்கு அவர் வழி செய்வாரா?

- இந்த இரண்டில் ஒன்றைத் தீர்க்கமாக எடுக்க வேண்டிய நிலைமை அரசுத் தலைவருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையின் கடந்த ஐந்தரை தசாப்த கால அரசியல் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்ப்பவர்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக அவதானிக்க முடியும். தமிழரின் இனப்பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கங்கள் காலம் காலமாகத் தமக்கிடையேயான அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கின்றன என்பதே அது.

இந்த அதிகாரப் போர்கள் மூலம் தமது அரசியல் அதிகாரத்தையும், செல்வாக்கையும் நிலைப்படுத்திப் பலப்படுத்தவே தென்னிலங்கை அரசியல் சக்திகள் காலங்காலமாக முயன்று வந்துள்ளன. அதன் விளைவாகவே தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை மேலும் மேலும் கூர்மையடைந்து, சிக்கலடைந்து, தீர்க்கப்பட முடியாத இக்கட்டை அடைந்தது. அவ்வப்போது ஆரம்பிக்கப்பட்ட அமைதி முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கும் இதுவே அடிப்படைக் காரணம்.

தென்னிலங்கை இந்தக் காலாதி காலப் போக்கிலிருந்து - அரசி யல் அதிகாரத்தைக் கைப்பற்றவும், தக்க வைக்கவும், பெருக்கிக் கொள்ளவும் பேரினவாதத்தை ஆயுதமாகப் பயன்படுத்தும் இந்த இழிநிலைப் பண்பிலிருந்து - அது விடுபடாத வரை தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு - இனப் பிணக்குக்கு நல்லிணக்க முடிவு சாத்தியப்படப் போவதேயில்லை.

இப்போதும் அதுதான் நிலைமை. மேலாதிக்க சிந்தனையிலிருந்து விடுபட்டு - பேரினவாதம் கிளப்புவதன் மூலம் கிடைக்கும் அரசியல் ஆதாயங்களைத் தவறானவை என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு - விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, பரஸ்பரம் நம்பிக்கை, பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயம் செய்வதில் பற்றுறுதி, தனிப்பட்ட அந்தரங்க அரசியல் இலாபங்களைத் துறந்து இலங்கைத் தீவின் எதிர்கால நலனுக்காகவே செயற்படும் திடசங்கற்பம், தூர நோக்கு ஆகியவற்றோடு தென்னிலங்கை அரசுத் தலைமை கருமமாற்ற முன்வந்தால் மட்டுமே அமைதி வழி முடிவு சாத்தியமாகும்.




வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. வல்லிபுர ஆழ்வார் தேரிலே வீதியுலா வருவதை முதலாவது படத்திலும் பக்தர்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: சி.சுந்தரலிங்கம்)*

## வல்லிபுர ஆழ்வார் தேர் உற்சவம் நேற்று சிறப்புற நடைபெற்றது

வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா உற்சவம் நேற்று சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

நேற்று காலை 8 மணியளவில் வசந்த மண்டபப் பூசை நடத்தப்பட்டு 9.15 மணியளவில் வல்லிபுர ஆழ்வார் தேரில் ஆரோகணித்து ஊர்வலமாக வந்தார்.

அங்கப்பிரதிஷ்டை செய்யும் அடியார்களும் அதைத் தொடர்ந்து அடியளித்து நேர்த்திக்கடன் தீர்க்கும் பெண் அடியார்களும் குறைந்த எண்ணிக்கையில் காணப்பட்டனர். முற்பகல் 10 மணிக்கு ஆழ்வார் தேர்ப்பவனி ஆலய முன்றிலில் முடிவுற்றது.

இம்முறை வல்லிபுர ஆழ்வாரின் தேர் உற்வசத்தின்போது அடியார் கூட்டம் ஏனைய வருடங்களை விட மிகக் குறைவாகவே காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் துன்னாலை பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் சுற்றிவளைப்பும் தேடுதலும் இடம்பெற்றது. வெளி இடங்களுக்கான போக்குவரத்துச் சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருந்ததால் அதிகளவான மக்கள் பங்குபற்றவில்லை என்று கூறப்படுகின்றது.

இன்று கடல்தீர்த்த உற்சவத்தில் அடியார்கள் கலந்துகொள்ள முயற்சிக்க வேண்டாமென ஆலய நிர்வாகத்தினர் ஒலிபெருக்கிமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினரின் ஆலோசனையின் பேரில் ஆலயப் பிரதம குருக்கள் தர்மகர்த்தா சபையினர், திருவிழா உபயகாரர் மற்றும் சுவாமியை ஊர்வலமாகத் தூக்கிச் செல்லும் தொண்டர்களுமாக 50 பேருக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி வழங்கப்பட்டமையால் அடியார்கள் எவரும் கடற்கரைத்தீர்த்தத்திற்குச் செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.(ப-155-173)

## ஓய்வூதியர்களுக்கான கட்டு நிதி வரவில்லையாம்

உள்ளூராட்சி மன்ற ஓய்வூதியர்களுக்குரிய ஓய்வூதியத்துக்கான கட்டு நிதி வங்கிகளுக்கு இன்னமும் வந்து சேராமையினால் கடந்த (செப்ரெம்பர்) மாதத்துக்கானஓய்வூதியத்தைப் பெற முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த செப்ரெம்பர் மாதத்துக்கான உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் உரிய காலத்தில் கிடைக்கப்பெற்றும் அதற்கான கட்டு நிதி கிடைக்காமையினால் உரிய வேளையில் ஓய்வூதியத்தைப் பெறமுடியாது திண்டாடுகின்றார்கள். (ப)

## சமுர்த்தி நிவாரண முத்திரைகள் கிடைக்கவில்லை எனப் புகார்

வடமராட்சிப் பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் சமுர்த்தி நிவாரண முத்திரைகள் சமுர்த்தி சட்ட விதிகளுக்கு அமைய வழங்கப்படவில்லை என பாதிப்படைந்தவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பாதிப்படைந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பியும் அவர்களுக்கு சமுர்த்தி முத்திரைகள் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டோர் மேலும்தெரிவித்துள்ளனர்.(ப-155-203)

## வடமராட்சியின் சில கடற்பகுதிகளில் கரையோரம் மீன்பிடிக்க அனுமதி

வடமராட்சி,ஒக்.6

வடமராட்சிக் கடற்பிரதேசத்தில் பருத்தித்துறை முனை, கற்கோவளம், மணல்காடு, குடத்தனை ஆகிய கடற் பகுதிகளில் கரையோரங்களில் பகல் வேளைகளில் வீச்சு வலை வீசி மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக் கடலில் கரையிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் சிறுசிறு கட்டுமரங்களில் (தெப்பம்) வலைவீசி, காலை 6.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரை மீன்பிடிக்கப் படையினர் அனுமதித்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் உள்ளூர் மின் சந்தைகளில் சூடை, மங்கு, செம்பாரை போன்ற சிறிய மீன்கள் விற்பனைக்கு இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களில் ஒரு கிலோ சூடை வியாபாரிகளுக்கு 150 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. மீன்சந்தைகளில் இச் சூடை மீன் கிலோ 200 ரூபா தொடக்கம் 250 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (ப-173)

## புகையிலை நாற்றுமேடை

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கையை மேற்கொள்ளவென புகையிலை நாற்றுமேடை அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இப்பிரதேச மக்களின் பணப்பயிர்களில் முக்கியமாக விளங்கும் புகையிலைப் பயிரை இம்முறை மேற்கொள்ள போதிய உர வகைகள் கிடைக்குமா என்ற சந்தேகத்துடன் இருந்துவரும் விவசாயிகள் தயக்கங்களுடனேயே புகையிலை நாற்றுமேடைகளை அமைக்கத் தொடங்கியுள்ளனர். இப்பிரதேசத்தில் புலோலி, அல்வாய் ஆகிய கிராமங்களில் புகையிலை நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. ஏனைய கிராமங்களில் இன்னமும் இப்பணி ஆரம்பமாகவில்லை.(ப)

## செஞ்சோலை மாணவியின் மரணம் குறித்து சர்வதேச விசாரணைக்கு உத்தரவிடுக!

### ஜனாதிபதிக்கு வன்னி மாணவர் ஒன்றியம் மகஜர்

கிளிநொச்சி,ஒக்.6

செஞ்சோலை வளாகத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்த மாணவியின் மரணம் வரையிலான அனைத்து நிகழ்வுகளையும் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். அதற்கான உத்தரவை தாங்கள் பிறப்பித்தல் வேண்டும்.

வன்னிப் பிரதேச மாணவர் சங்கங்களின் ஒன்றியம் மற்றும் வன்னிப் பிரதேச பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியம் என்பன இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

இது தொடர்பாக, மேற்படி ஒன்றியங்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முல்லைத்தீவு மாவட்ட வள்ளிபுனத்தில், கடந்த 14.08.2006அன்று இடம்பெற்ற விமானத்தாக்குதலில் இறந்துபோன 52 மாணவிகள் தவிர [illegible] கண்டிக்கு அழைத்துச் சென்றவேளை, அவர்களின் மரண அவலத்திலும், மரணத்தின் பின்பும் தங்கள் அரசு இனவாதத்திற்கு தூபமிட்டுக்கொண்டிருக்கிறது.

இறந்துபோன அந்த மாணவியின் உடலைக்கூட இங்கு வராது தடுத்து, உண்மைக்கு மாறாக மாணவ மரணங்களுக்கு நியாயம் கற்பிக்க தங்கள் அரசு முற்படுகிறது.

- கொண்டுசெல்லப்பட்ட மூன்று மாணவியருக்கும் முறையான சிகிச்சை அளிக்கப்படாமை.
- மரணப்பிடியில் தவித்த மாணவியரை அச்சுறுத்தி வாய் முறைப்பாடு பெற்றமை.
- சிகிச்சைக்காகச் சென்ற மாணவியரை தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தி தடுத்துவைத்தமை.
- மாணவியருக்கு போதிய வைத்திய சேவையை வழங்காது திட்டமிட்டு உடல் நிலையை சீரழிக்கின்றமை.
- மரணித்த மாணவி தம்பிமுத்து தயாளினி என்பவரின் உடலை மேலதிக பிரேத பரிசோதனை என்று கூறி பெற்றோரிடம் ஒப்படைக்காது இழுத்தடித்து வருகின்றமை.
- ஏனைய இரு மாணவியரை பெற்றோர் கோரியும் அவர்களை விடுவிக்காது தடுத்து வைத்திருக்கின்றமை.

இவ்வாறு அரசுசெய்யும் கொடுமைகளை வன்னி மாணவர் ஒன்றியமும், வன்னி பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியமும் வன்மையாகக் கண்டிக்கின்றன.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் இறந்த மாணவியின் உடலைப் பிரேத பரிசோதனை செய்த போது அங்கு பல உணமைகள் வெளியாகி இருக்கின்றன. கண்டியில் முறையாகச் சிகிச்சை இடம்பெறாமையே மரணத்துககுக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த உண்மையை உலகறியவிடாது தடுக்கவே தங்கள் அரசு மீள் பிரேத பரிசோதனை என்றும் - பிரேதம் ஒப்படைக்கப்பட முடியாதென்றும் - கூறி நாடகமாடுகிறீர்கள் என உணர்கின்றோம்.

உலகின் எந்த இடத்திலும் நடக்காத மாணவ அவலங்கள் ஸ்ரீலங்காவில் நடைபெறுகின்றன.

எனவே, இத்தகைய அவலங்கள் சர்வதேச மயப்படுத்தப்படவேண்டும் என நாம் வேண்டுகின்றோம் - என்று அதில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்துவிட்டது

கிராம சேவையாளர் தரம் II

போட்டிப் பரீட்சை மாதிரி வினாத்தாள் விடைகளுடன் - விலை 100/= காசுக்கட்டளைகளை ஆசிரியர் தே.திருமுருகன் கோண்டாவில் மேற்கு அஞ்சல் அலுவலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**திகழ் கல்வி நிறுவனம்**
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

## காணவில்லை



உடுவில் மல்வத்தைச் சேர்ந்த **யோன் மேரிராசா வசந்திமாலா** (மாலா) என்பவரை 28.09.2006 அன்றிலிருந்து காணவில்லை. இவர் 50 வயது மதிக்கத்தக்கவராவார். மனநிலை பாதிக்கப்பட்டவர். இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: **ச.யோன் மேரிராசா (பாலு)**
*அம்பாள்வீதி, மல்வம், உடுவில், சுன்னாகம்.*
T.P.No.*021 4591046*

(54175)

## வீடு வாடகைக்கு உண்டு

கச்சேரி நல்லூர் வீதியில் Temple Road க்கு மிக அண்மையில் நல்ல சூழலில் உள்ள 4 படுக்கை அறை, இணைந்த குளியலறை, சமையலறை, சாப்பாட்டறை மற்றும் பெரிய Hall உடனான வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
222 5889

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் ஜெல்கிறீம் கொம்பனி ஒன்று விற்பனைக்குண்டு.

**இராசன்**
*இல.54, M.S.லேன், கோண்டாவில் மத்தி*
*222 7152*

## வீடு காணி விற்பனைக்கு

மானிப்பாய், கட்டுடையில் ஆறு பரப்புக் காணியும் ஆறுஅறை கொண்ட சகல வசதிகளும் கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
*கந்தையா இலட்சுமணன், கட்டுடை மானிப்பாய்.*
*(யு.என்.எச்.சி.ஆர்.தண்ணீர் தொட்டி வீடு சண்முகம் கடைக்கு முன்பாக)*

## சேவை நலன் பாராட்டு

### திருமதி அமிர்தா யோகேந்திரா

S.L.T.S. Class - 1

(சிரேஷ்ட ஆசிரியை, யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்)



ஆசிரிய சேவையில் நிறைவான இருபத்தெட்டாண்டுகள் சேவையில், இருபத்து மூன்று ஆண்டுகள், எம் பாடசாலையில் தன்னலமற்ற சேவையாற்றி இன்று (06.10.2006) சுய விருப்பின் பேரில் ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி அமிர்தா யோகேந்திரா அவர்களின் சேவையினைப் பாராட்டி சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

*அன்னையாய் அரவணைத்து*
*அறிவூட்டி அறங்காத்து*
*நண்பியாய் சோதரியாய்,*
*நல்லுணர்வின் நவங்காத்து*
*நல்லாசிரியையாய் நற்பணியை*
*இறைபணிக்கா யர்ப்பணித்து*
*சேவை செய்தோய்! வரும் நாளெலாம்*
*அருளோங்க வாழியவே!*

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
**யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.**

(54158)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஒக்.6

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்தம் நடத்திவரும் நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'ஆறு முகனின் அருளாட்சி' என்னும் தலைப்பில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ். சிவதட்சணாமூர்த்தியின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

பேரவைத் தலைவர் எஸ்.அருள்லிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

(173-203)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

### பாலசுப்பிரமணியம் அர்ச்சனா

திதி: 06.10.2006 பௌர்ணமி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 17 |
| 04 | 10 |
| 1986 | 2005 |

*ஆண்டு ஒன்று ஆகிவிட்டால் ஆறிடுமோ*
*எங்கள் துயரம்*
*மொட்டாக இருந்த எம் அம்மா நீ பூவாக மலர்ந்து*
*நாம் ஆசையாகப் பார்த்திட முன் சருகாகி*
*மண்ணில் மாண்டது ஏன்?*
*பாசக் கரம் பரிதவிக்க நேசக் கரம் துடி துடிக்க*
*அம்மா நீ பறந்த மாய மென்ன?*
*நாம் சிறகிழந்த பறவையானோம்*
*ஆயிரம் ஆயிரம் உறவு இருப்பினும்*
*உன் பாசத்திற்கு ஈடாகுமா?*
*எம் உடலில் உயிர் இருக்கும் வரை*
*உமது நினைவு மாறுமா? உமது செயல்*
*யாவும் மறந்திடுமோ அம்மா? இனி ஒரு பிறவி*
*இருந்தால் மீண்டும் காண்போம்.*

இனியவளே! மறு முறை ஒருதரம் பிறந்திடு
எம் மடிதனில் சுமந்திடும் வரம் கொடு
ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்.

*விளையாட்டரங்கு வீதி,*
*கட்டப்பிராய்.*

(54179)

**- குடும்பத்தினர்.**

## நவக்கிரக ஹோமசாந்தி

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய நவக்கிரக ஹோமசாந்தி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உபயமாகப் பங்குகொள்ளவுள்ள அடியார்கள் 8 மணிக்கு முன்னர் பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறுஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-75-203)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 | 10 |
| 09 | 10 |
| 1939 | 2003 |

### அமரர் வேலுப்பிள்ளை வாமதேவன்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

*மனிதப் பிறப்பு எடுத்து மாணிக்கமாய் திகழ்ந்தீர்!*
*புனிதப் பணிசெய்து புகழுடன் திகழ்ந்தீர்!*
*ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறாது எம் துயர்*
*தேடுகின்றோம் உங்கள் பாசத்தை*

*கல்லூரி வீதி,*
*வட்டுக்கோட்டை.*

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**

(54144 வெ)

## 6 ஆம் மாத நினைவு நாள்



| ஊற்றாக | காற்றாக |
|---|---|
| 10 | 06 |
| 12 | 05 |
| 1954 | 2006 |

### நடராசா இராசகுலசிங்கம்

(அதிபர் - ரதி கண்ணாடி அகம், இல.5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ரதி வேக்ஸ், ஸ்ரான்லி பேணிசிங் பலஸ் உரிமையாளர் அமரர் மருதப்பு நடராசாவின் மகன் )

*நித்தமும் நின் நினைவாய் நாமின்று தவிக்கின்றோம்*
*நீங்காத நினைவலைகள் ஓயும் நாள் எப்போது?*
*தத்துவங்கள் பல சொல்லக் கேட்டாலும் எம் முணர்வு*
*தாங்காதே சிங்கமே தணலாக மாறுதடா*

*பிறவுண் வீதி,*
*இல. 6, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

உன் பிரிவால் தவிக்கும்
**குடும்பத்தினர்.**

(54190)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 19 | 17 |
| 01 | 09 |
| 1944 | 2005 |

பதுளையைப் பிறப்பிடமாகவும் வட்டு. கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் குமாரவடிவேலு சுப்பிரமணியம்

( உரிமையாளர் - நாயகி புரொடக்ஸ்)

திதி: 06.10.2006 புரட்டாதி மாதப் பூரணை

*அன்பால் எம்மை அணைத்து*
*அறிவால் எங்களை உயர்த்தி*
*பண்பால் பலர் போற்ற*
*வாழ வைத்த தெய்வமே.*

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

*வட்டு. கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.*

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(54167)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் நாகமுத்து

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் நாகமுத்து அவர்கள் 04.10.2006 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 4.10.2006 புதன்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி, சிறுவிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.வாமதேவன் (மகன்)**

*அளவெட்டி.* (54168)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியிலும் பெற்றோல் விநியோகம்

தென்மராட்சி, ஒக்.6

சாவகச்சேரி எரிபொருள் நிலையத்தில் கடந்த 4ஆம் திகதி வாகனங்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டதையடுத்து நகர்ப் பகுதி வாகனங்களால் நிறைந்து காணப்பட்டன.

ஒரு பக்கத்தில் ஒரு மைல் நீளத்திற்கு மேலாக மோட்டார் சைக்கிள்களும் மறுபக்கத்தில் 300இற்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிகள், கார்கள், வான்கள் ஆகியவையும் வரிசையில் நின்று எரிபொருள் பெற்றதைக் காண முடிந்தது. எரிபொருள் பெறுவதற்கு நீண்ட வரிசை காணப்பட்டதால் பிரதேச அரச அலுவலகங்களில் கடமையாற்றுவோர் தமது கடமைகளை விட்டுச் செல்லமுடியாததால் பெற்றோல் பெறமுடியவில்லை என் விசனம் தெரிவிக்கின்றனர். (ப)

## 50 சிறுவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக்.6

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சாவகச்சேரி கச்சாய் வீதி உதயசூரியன் முன்பள்ளியினர் கடந்த முதலாம் திகதி சிறுவர்தின நிகழ்வினை நடத்தினர்.

இந் நிகழ்வில் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலிருந்து 50இற்கும் மேற்பட்ட சிறார்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

முன்பள்ளி ஆசிரியை செல்வி லோ. இலட்சுமணன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் சாவகச்சேரி நகர பொது சுகாதாரப் பரிசோதகர் சு.மணிவர்ணம், கோவிற்குடியிருப்பு பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் க.கபிலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப)

## பொதுமக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ். செயலகத்துக்கு மேற்குப் பக்கமாக புதிதாக முளைத்திருக்கும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தினால் வீதியால் செல்லும் பொது மக்களும் அரச ஊழியர்களும் மிகவும் இன்னற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போக்குவரத்து வீதியின் அருகே உள்ள இப் பாதுகாப்பு நிலையத்தில் வீதிகளை மூடி சைக்கிள்களை நிறுத்துவதனால் வீதியால் செல்வோர் பெரும் அவலங்களையும் கஷ்டங்களையும் தினமும் அனுபவிப்பதாக பாதசாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ப-75)

## பளைப்பகுதி அலுவலர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள பளைப் பிரதேச அலுவலர்கள் எங்கு சென்று கடமையாற்றுவது என்று தெரியாது சங்கடப்படுகின்றனர்.

பளைப் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்கள அலுவலகங்கள், உள்ளூராட்சி அலுவலகம், பாடசாலைகள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவை மூடப்பட்டுள்ளதாலேயே அலுவலர்கள் மத்தியில் குழப்பமேற்பட்டுள்ளது.

தொடர் எறிகணை வீச்சுகள் காரணமாக பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் வெளியேறி ஏனைய பகுதிகளுக்குச் சென்றுவிட்டதாகவும், திணைக்கள கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளதாகவும் கூறும் அவர்கள் எங்கு செல்வது என்று தெரியவில்லை என குழப்பமடைந்துள்ளனர். (ப)

## ஓலையை எடுத்தபோது பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஒக்.6

கிடுகு பின்னுவதற்காக ஓலையை எடுத்த போது அதனுள் படுத்திருந்த புடையன் பாம்பு ஒருவரை கடித்தது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை வரணி நாவற்காட்டில் இடம்பெற்றது.

அதேஇடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் இராசம்மா(வயது 50) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். இவரை வாகனம் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப)

# ஆடம்பரமின்றி அமைதியாக நடந்த ஆசிரியர் தின நிகழ்வுகள்

நல்லூர், ஒக்.6

யாழ்ப்பாண நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வழமைபோலன்றி நேற்றையதினம் மிகவும் அமைதியான முறையில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், ஸ்ரான்லிக் கல்லூரி போன்ற சில பிரபல கல்லூரிகளில் ஆசிரியர் தினம் சிறிய அளவில் நடைபெற்றது.

சில கல்லூரிகளில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் சமுகமளித்து ஆசிரியர்களைக் கௌரவித்ததுடன் அதிபர், ஆசிரியர்களுடன் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

மாணவர்கள் அற்ற சூழ்நிலையில் இது ஒரு முக்கிய நிகழ்வு என்பதால் சிறிய அளவில் ஆசிரியர்தினத்தைக் கொண்டாடியதாக அதிபர்கள் பலரும் தெரிவித்தனர். (ப-111)

# சந்நிதியான் ஆச்சிரம இலவச வைத்திய சேவை ஞாயிறு; புதன்கிழமைகளில்

வடமராட்சி, ஒக்.6

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இலவச வைத்திய சேவை வழமைபோல் ஞாயிறு, புதன்கிழமைகளில் நடைபெற்று வருகின்றன என்று ஆச்சிரமத்தினர் தெரிவித்துள்ளனர்.

டாக்டர் பொன். சின்னத்தம்பி, டாக்டர் ஞானசீலன் ஆகியோர் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் மகப்பேற்றுக்கான சிகிச்சைகளை பிரதி சனிக்கிழமைகளில் டாக்டர் ஜி. பவானி செய்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சைக்கான மருந்துகள் அனைத்தும் ஆச்சிரமத்தினரால் வழங்கப்பட்டு வருவதாகவும் ஆச்சிரமத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-203-173)

## நூலக சங்கம் நடத்தும் கற்கைநெறி கருத்தரங்கு

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலையத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தரம் I (2005/2006) மற்றும் தரம் 2 பகுதி II (2004/2005) மாணவர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு இலங்கை நூலகச்சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (ப-203)

# இலங்கையின் முடிக்குரிய இளவரசர் தானே என்கிறார் மொனராகலை வாசி

### அவரால் அடிப்படை உரிமை மனுவும் தாக்கல்

கொழும்பு, ஒக்.06

இலங்கையின் முடிக்குரிய இளவரசர் எனத் தன்னை அழைக்கக்கோரி மொனராகலைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர் ஒருவர், அடிப்படை உரிமை மனு ஒன்றை நேற்று உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

தர்மபால திஸாநாயக்க என்ற இந்தப் பாடசாலை அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அரசமைப்பு விவகார அமைச்சின் செயலாளர், புத்தசாசன அமைச்சின் செயலாளர் மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

பழம்பெரும் வரலாற்று ரீதியான பத்திரத்துக்கு அமைய தான் இலங்கை முடிக்குரிய வம்சத்தைச் சேர்ந்தவர் எனவும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார். (ஐ-12)

# முருங்கைக்காயை வடகம் செய்து சேமிக்குக

யாழ்.மாவட்டத்தில் தற்போது காணப்படும் உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டில் மரக்கறி வகையும் அடங்குவதால் இவற்றினையும் சேமித்தல் அவசியமாகின்றது.

இந்த வகையில் தற்போது எமது பிரதேசத்தில் அதிக அளவில் கிடைக்கும் மரக்கறி வகைகளில் ஒன்றான முருங்கைக் காய்களில் முற்றியவற்றை வீணாக்காது வடகம் செய்து அதனை சேமித்து தட்டுப்பாடான காலத்தில் பயன்படுத்தி போசாக்கின்மையை நிவர்த்திசெய்யலாம்.

**முருங்கைக்காய் வடகம்**

**தேவையான பொருள்கள் :-**

| | |
|---|---|
| 01. முருங்கைக்காய் | 8-10 |
| 02. உழுந்து | 200 கிராம் |
| 03. பச்சை மிளகாய் | 6-7 |
| 04.சின்ன வெங்காயம் | 10-15 |
| 05. வெந்தயம் | 10கிராம் |
| 06. உப்பு | தேவையான அளவு |
| 07. பெருஞ்சீரகம் | 1 தேக்கரண்டி |

**செய்முறை:-**

உழுந்தையும் வெக்தயத்தையும் 5-6 மணித்தியாலம் நீரில் ஊறவிடவும். பின்பு கல்லில்லாது அரித்துத் துப்புரவுசெய்து நீரை வடித்த பின்னர் அதனை அம்மியில் அரைத்து இறுக்கமான குழையலாக எடுக்க வேண்டும்.

முருங்கைக்காயை கழுவி துப்புரவாக்கிய பின்பு வெட்டி அதனை மூடக் கூடிய அளவு நீர் சேர்த்து அடுப்பில் 15-20 நிமிடம் அவிய விடவும். (நன்கு அவியத் தேவையில்லை) பின் இறக்கி ஆறவிடவும். ஆறிய முருங்கைக் காயின் சதையை ஒரு கரண்டியால் அகற்றி வேறாக்கி வைக்கவும்.

முருங்கைக் காய்ச் சதை, வெட்டிய வெங்காயம், மிளகாய், பெருஞ்சீரகம், அரைத்த உழுந்து, உப்பு என்பவற்றை ஒன்றாக சேர்த்து நன்கு பிசைந்து விடவும்.

பின்பு சிறுசிறு உருண்டைகளாக உருட்டி உள்ளங்கையில் வைத்து மெல்லிய வட்டங்களாக தட்டி ஓர் உலர்ந்ததட்டில் வைத்து வெயிலில் காயவிடவும். ஒருபக்கம் காய்ந்ததும் மறுபக்கம் திருப்பி வைக்கவும். 3-4 நாள்கள் தொடர்ச்சியாகக் காயவிடவும். ஈரப் பிடிப்பில்லாமல் நன்கு காய்ந்ததும் உலர்ந்த போத்தல்கள் அல்லது பொலித்தீன் பைகளில் அடைத்து பாதுகாத்து தேவையான பொழுது பொரித்து சாப்பிடலாம். இந்த வடகம் நல்ல சுவையாக இருக்கும்.

**திருமதி அ.சிறீரங்கன்,**
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்,
பிரதி விவசாயப்பணிப்பாளர்(விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம் .

## பிரார்த்தனை மண்டப ஆண்டு விழா

வடமராட்சி, ஒக்.6

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மெதடிஸ்த திருச்சபை பிரார்த்தனை மண்டபத்தின் 11ஆவது ஆண்டு நிறைவு விழாஎதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, பருத்தித்துறை - கட்டைவேலி சேகர முதன்மைக் குரு வண.டி.அழகராசா தலைமையில் நடைபெறும்.

அன்றையதினம் சிறப்பு நிகழ்வாக நன்றி தெரிவிக்கும் ஆராதனையும்; ஸ்தோத்திர ஆராதனையும் இடம்பெறும். (ப)

## கடவுள் சுவாமிகள் குருபூசைவிழா

யாழ்ப்பாணம், ஒக்.6

சிவஸ்ரீ கடவுள் சுவாமிகளின் வருடாந்த மகா சமாதி குருபூசை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுவிலில் உள்ள கடவுள் சந்நிதியில் நடைபெறவுள்ளது. (ப-203)

## பௌர்ணமி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.6

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஆலய பூசையைத் தொடர்ந்து திருமுறை முற்றோதல் நிகழ்வு, அகத்தியர் தேவாரத்திரட்டு, மழை வேண்டிப் பதிகம், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ப-203)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.6

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் புரட்டாதி பூரணை விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுதுமலைதெற்கு சாவற்கட்டு அந்திக்குழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாசிரியர் த.புலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சைவப்புலவர் நித்ய தசீதரன் 'அறநெறியில் வாழ்ந்திடுவோம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நடிக்கும் 'யாருக்கு யார் சொந்தம்' என்ற தலைப்பிலான நாடகமும் 'எழுந்திரு விழித்துக்கொள்' என்ற தலைப்பில் கண்காட்சியும் இடம்பெற உள்ளன. (ப-203)

## நுணாவில் பகுதியில் காலபோகம் ஆரம்பம்

தென்மராட்சி, ஒக்.6

நுணாவில் மேற்கு நெல்வயல்களில் காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நெற்செய்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் மழை பெய்ததை அடுத்து அப்பகுதி நெற்செய்கையாளர்கள் வாகனங்களில் குப்பைகள் ஏற்றி வயல்களில் பறிக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப)



## வரணி மருந்தகத்துக்கு அருகில் எறிகணை வீழ்ந்து வெடித்தது

தென்மராட்சி, ஒக்.6

வரணி மத்திய மருந்தகத்திற்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை எறிகணை வீழ்ந்து வெடித்தது.

மருந்தகத்திற்கு சிகிச்சைபெற வந்திருந்த நோயாளர்களும், மருந்தக ஊழியர்களும் தலைதெறிக்க அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

இச் சம்பவத்தையடுத்து நேற்றுமுன்தினம் மருந்தகம் மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கீட்டு அட்டைகளுக்கான பெற்றோல் விநியோகம் இரண்டாவது நாளாக நேற்றும் மேற்கொள்ளப்பட்டது.
யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முற்றவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காகப் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதை முதலாவது படத்திலும் வாகன உரிமையாளர்கள் பெற்றோல் பெறுவதற்காக காத்திருப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

# கலந்துரையாடல்

கல்வியங்காடு, ஒக்.6

இலங்கை நூலக சங்கத்தின் யாழ்ப்பாண கிளை நிலையம் நடத்தும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி தரம்I மற்றும் தரம்II ஐச் சேர்ந்த 2005/ 06 கல்வியாண்டைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இலங்கை நூலக சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் திருமதி கலீபனா சந்திரசேகர் கேட்டுள்ளார்.

(1-79)

# மயானம் துப்புரவு செய்யும் பணி

வடமராட்சி, ஒக்.6

புலோலி, ஆனைவிழுந்தான் மயானம் பருத்தித்துறை பிரதேச சபையினால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மயானத்திற்குள்ளே காணப்பட்ட பற்றைகள் யாவும் வெட்டி அழிக்கப்பட்டதுடன், மயானத்திற்குச் செல்லும் வீதியும் துப்புரவு செய்யப்பட்டது.

சபைத் தொழிலாளர்கள் இத்துப்புரவுப் பணியைப் பூர்த்தி செய்தனர்.

(ப)

# வேலைக்கு சென்றவரை காணவில்லையாம்

கல்வியங்காடு, ஒக்.6

வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த குடும்பஸ்தரைக் காணவில்லை என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே இடத்தைச்சேர்ந்த கந்தசாமி தேவராசா (வயது-53) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

மேற்படி நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளிகளை பராமரிப்பவர். கடந்த ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி தொழில் நிமித்தம் சென்றவர் இது வரை வீடு திரும்பவில்லை என அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்

(1-79)

**Alliance Francaise de Jaffna**

83,Palaly Road, Kanthamadam, Jaffna

Phone: 021 222 8093

E-mail: alliancejaffna@yahoo.com

**யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்**

**பிரெஞ்சு மொழி வகுப்புகள்**

**புதிய பிரிவு**

**கல்லூரி மாணவர்களுக்கான, வேலை செய்வோருக்கான, மொழி பயிலும் ஆர்வமுள்ளோருக்கான தொடக்க நிலை வகுப்புகள் 14.10.2006 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.**

**இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் உதவியுடன் நடைபெறுகின்றது. ஒரு வருடத்தில் சர்வதேச தரத்திலான பிரெஞ்சு மொழி பரீட்சைக்கு தோற்ற முடியும்.**

**பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். பதிவுகளுக்கு நேரில்/தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.**

# தொழில்நுட்ப அலுவலர் பதவிகள்; நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஒக்.6

மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் தரம்II 'ஆ' பிரிவுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தோரின் இரண்டாவது பட்டியல் யாழ்.செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

இந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்றும் -

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் செயலகத்தால் அனுப்பப்படும் என்றும் -

கொழும்புக்கான பயண அனுமதி தொடர்பான பதிவுகளை உடனடியாக மாவட்ட செயலக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளும்படியும் - யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு-

எம்.சிவதாசன் - சங்குவேலி வடக்கு, மானிப்பாய், ரி.எம்.பாலதாஸ் - பலாலி றோட், திருநெல்வேலி வடக்கு, எஸ்.சிறீதரன் வாரிபுலம், சுன்னாகம், எஸ்.பிரகாஷ் - கேணியடி, கொக்குவில் மேற்கு கொக்குவில், வி.வினோஜன் - முதலாவது ஒழுங்கை, யாழ். றோட், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய், எஸ்.கிருஸ்ணேஸ்வரன் - மிஷன் பாடசாலை வீதி, கோண்டாவில். என்.ஜனார்த்தனன்- அம்பலவாணர் றோட், உடுவில் கிழக்கு, சுன்னாகம், ஆர்.டி.வனஜா, சிவனடியார் றோட், (ஐ.சி.ஆர்.சி) சங்குவேலி வடக்கு,மானிப்பாய். ரி.விஜயபாலன்,வேட்டையார் வளவு, உடுவில், சுன்னாகம்.

எஸ்.சத்தியதீபன் - நீர்வேலி வடக்கு, நீர்வேலி, வை.சிறிரங்கன் - ஏழாலை கிழக்கு, ஏழாலை, கே.குணாளன் - பாலாவி றோட், கொடிகாமம், சி.ஜயசுந்தரரேஸ்வரர் - முதலாவது ஒழுங்கை அம்பல் றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில்-

எம்.முரளிதரன்- ஸ்ரேசன் றோட்,கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். எஸ்.ஆதவன் - சங்கரத்தை, வட்டுக்கோட்டை, எஸ்.சிவகணேசன் - சங் கரப்பிள்ளை றோட், ஆனைக்கோட்டை, ரி.ஈசன், வாரியபுலம், சுன்னாகம், கே.யசோத ராதேவி - கோப்பாய் வடக்கு,கோப்பாய்.

# கொக்குவில் கிழக்கு, மேற்கில் நேற்று சுற்றிவளைத்துச் சோதனை

யாழ்ப்பாணம், ஒக்.6

கொக்குவில் கிழக்கு, மேற்குப் பகுதிகள் நேற்று அதிகாலை முதல் இராணுவத்தினரின் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன. வாகனங்களில் இராணுவத்தினர் கொண்டு வந்து இறக்கப்பட்டு இந்தத் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது.

அதிகாலை 5.30 மணிமுதல் கொக்குவில் கிழக்கில் உள்ள கோயில் வீதி, உடையார் வீதி, பொற்பதி வீதி, நாமகள் வீதி ஆகிய பகுதிகளையும் மற்றும் கொக்குவில் மேற்குப் பகுதியில் கேணியடி, பிடாரி கோயிலடி ஆனைக்கோட்டையில் ஒரு பகுதி ஆகியவற்றையும் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது.

அதிகாலையில் இப்பகுதிக்குள் பொது மக்கள் யாரும் உட்செல்ல அனுமதிக்கப்படாததுடன், உள்ளிருந்தவர்கள் எவரும் வெளிச் செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. வீடு வீடாக சென்ற இராணுவத்தினர் வீடுகளுக்குள் சோதனைகளை மேற்கொண்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டனர். சந்தேகத்திற்கிடமானவர்கள் எனக் கருதப்பட்டவர்களை புகைப்படம் எடுத்ததாகவும் சொல்லப்படுகிறது.

(ப-68-100)

## குடாநாட்டுக்கு 535 தபால் பொதிகள்

# இங்கிருந்து அனுப்பப்படும் கடிதங்களில் உலோகப் பொருள்களை தவிர்க்க அறிவுறுத்து

கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களில் தேங்கிக்கிடக்கும் 535 தபால்பொதிகளை யாழ்.மாவட்டத்திற்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாணப் பிரதித்தபால் அதிபர்நாயகம் வி.குமரகுரு உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

வெளிமாவட்டங்களில் தேங்கியுள்ள 535 தபால் பொதிகள் இங்கு எடுத்துவரப்படவுள்ளதுடன் யாழ்.மாவட்டத்தில் இருந்து 36 தபால்பொதிகளை எடுத்துச்செல்லவும் ஏற்பாடாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடிதங்களை அனுப்புவோர் 'புளப்பி', 'சீ.டி' போன்ற பொருள்கள் மற்றும் உலோகம் அடங்கிய பொருள்கள் போன்றவற்றை பொதிகளில் அல்லது கடிதங்களுக்குள் வைத்து அனுப் புவது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் -

இவ்வாறான பொருள்கள் கடிதங்களுக்குள் வைக்கப்பட்டால் சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டு அவை உரிய விலாசத்திற்கு அனுப்பப்படாது நிறுத்தப்படும் -என்றும் அவர் தெரிவித்தார்.

கடிதங்களையும் மற்றும் பொதிகளையும் சோதனையிடும் போது வீண் தாமதங்கள் ஏற்படுகின்றன. எனவே இத்தகைய பொருள்களை தபால்களில் அல்லது பொதிகளில் வைத்து அனுப்புவதை அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்- என அவர் கேட்டுள்ளார். (1-203)

# சிவில் வாகன உரிமையாளர்களுக்கு வாடகைப்பணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.6

ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின்னர் அத்தியாவசிய சேவைகளுக்கென படைத்தரப்பினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சிவில் வாகனங்களுக்கு வாடகைப் பணம் வழங்கப்படவிருப்பதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இக்கொடுப்பனவுகளை வாகன உரிமையாளர்கள் யாழ்ப்பாணம் சிவில் காரியாலயத்தில் நாளை முதல் மூன்று தினங்களில் உரிய ஆவணங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வாகனங்களின் பதிவு விவரப் பத்திரம், வருமான வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை உரிமையாளர்கள் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# சாந்தியகத்தில் இன்று இடம்பெறும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.6

''போர்ச்சூழலில் குடும்ப அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள சாந்தியகத்தில் நடைபெறவுள்ளது. அருட்தந்தை இராச நாயகம் இதில் கருத்துரை வழங்குவார். (ப-203)

# லயன்ஸ் கழக ஆதரவில் முன்பள்ளி ஆசிரியர் தினம்

யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் நடத்தும் ஆசிரியர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (203)

# மண்எண்ணெய் விநியோகம்

நல்லூர், ஒக்.6

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஜே/68, ஜே/69, ஜே/70, ஜே/71, ஜே/72, ஜே/74, ஜே/75, ஜே/76 கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்தவர்களுக்கு குடும்ப அட்டைக்கு 2லீற்றர் என்ற அடிப்படையில் பிரதான வீதி மடத்தடி எரிபொருள் நிலையத்தில் மண்எண்ணெய் வழங்கப்படுகின்றது. (1-111)

# அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை

பாடசாலை அதிபர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை நேற்று வியாழக்கிழமை யாழ் வலயக் கல்விப்பணிமனையில் நடைபெற்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அநேக பாடசாலைகளில் அதிபர்கள் பதவிக்கான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் -

இந்த நியமனங்களின் மூலம் அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படலாம் எனவும் தெரிகின்றது. (1-111)

# குடித்தொகை அபிவிருத்தி முதுமாணி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ்.பல்கலைக்கழகத்தில் குடித்தொகை அபிவிருத்திக் கல்விக்கான முதுமாணி கற்கை நெறியைப் பயிலும் - இதுவரை இணைப்பாளரைச் சந்திக்காத - மாணவர்கள் எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் காலை 9மணிதொடக்கம் முற்பகல் 11மணிவரை இணைப்பாளரைச் சந்திக்குமாறு பட்டப்பின் படிப்புக்கள் பீடாதிபதி கே.கந்தசாமி கேட்டுள்ளார். (ப-202)

**வீடு விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் 2½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.**

**தொடர்பு: சரோஜினி**

***265, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.***

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கண்மணி வல்லிபுரம்



நாராயணன் வீதி, கோண்டவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கண்மணி வல்லிபுரம் நேற்று (05.10.2006) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் மகன் வ.சிவலிங்கம் அவர்களின் இல்லத்தில் (கோண்டாவில் கிழக்கு) நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாராயணன் வீதி, கோண்டாவில்.-*

(54184)

**தகவல்:**
**பிள்ளைகள்**
**வ.சிவலிங்கம் (யா. மா.சபை),**
**வ.யோகராசா (யா.மா.சபை),**
**வ.கைலைநாதன்**
**(தெல்லிப்பழை வைத்தியசாலை).**

## திருமதி கந்தையா துரையம்மா



அச்சுவேலி வடக்கை சேர்ந்த திருமதி கந்தையா துரையம்மா நேற்று (05.10.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் (புறோக்கர்) அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(06.10.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வல்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''லைசா இல்லம்''*
*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

(54183)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## சம்பந்தர் இரத்தினசிங்கம்

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் தற்போது இல 53, இராணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தர் இரத்தினசிங்கம் 04.10.2006 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற பிரதம தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும் அகிலன் (வேர்ள்ட் விஷன் பணியாளர்), அன்பரசி (நான்காம் வருடம், கலைப்பீடம்,யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.53, இராணி வீதி, நல்லூர்.* (54180)

**தகவல்:**
**திருமதி அன்னப்பிள்ளை (மனைவி).**

**வான் விற்பனைக்குண்டு**

**59-XXXXதொடரிலக்கமுடைய Hiace-வான்(5கதவுகள்) உடன் விற்பனைக் குண்டு**

**தொடர்பு:**

***கற்பகப் பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு. T.P 0602212518***

**பிரத்தியேக வகுப்பு**

**தமிழ்**

A/L, O/L மாணவர்களுக்கானது.

உயர்ந்ததரச் சித்திக்கு ஒரேவழி தொடர்புகளுக்கு:-

| | |
|---|---|
| **[illegible]** புகையிரதநிலைய வீதி,சுன்னாகம் | **சஜீபன்வாணிப நிலையம்** மகளிர் கல்லூரி முன்பாக, பண்டத்தரிப்பு |

**[illegible] 021 222 [illegible]**

[illegible] கற்க விரும்புவோருக்கு வந்து கற்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பாதுகாப்புச் செலவினம் 2007இல் இரு மடங்காக உயர்வு

## ரூ.7,000 கோடியிலிருந்து ரூ.14,000 கோடியாக அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.6

**நாட்டின் பாதுகாப்புச் செலவினத்தை அடுத்த ஆண்டில் இரட்டிப்பாக்க - நாறு வீதம் அதிகரிக்க - அரசு தீர்மானித்திருக்கிறது.**

**இதன்படி அடுத்த ஆண்டுக்கான உத்தேச பாதுகாப்புச் செலவினம் சுமார் 14 ஆயிரம் கோடி ரூபாவாக இருக்கும். இது, இந்த வருடத்துக்கு (2006 ஆம் ஆண்டுக்கு) ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏழாயிரம் கோடி ரூபாவின் இரண்டு மடங்கு என்பது குறிப்பிடத்தக்கது.**

**இதேசமயம், நாட்டின் மொத்த செலவினத்தையும் இந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அடுத்த ஆண்டில் நாற்பது வீதம் அதிகரிக்க அரசு முடிவு செய்திருக்கின்றது.**

அடுத்த நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டிலேயே இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் கூடிய போது, நாட்டின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்குரிய உத்தேச மதிப்பீட்டு நிதி நிலை அறிக்கையை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்தார். அதிலேயே மேற்படி விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

-உத்தேச மதிப்பீட்டின்படி - இந்த ஆண்டில் 6 ஆயிரத்து 950 கோடி ரூபா ஒதுக்கப்பட்ட பாதுகாப்புத் துறைக்கு அடுத்த ஆண்டில் 13 ஆயிரத்து 955 கோடியே 63 லட்சம் ரூபா ஒதுக்கப்படுகின்றது.

நாட்டின் மொத்தச் செலவினம் கடந்த நிதி அறிக்கையின்படி இந்த ஆண்டில் 56 ஆயிரத்து 830 கோடி ரூபாவாக இருந்தது. இது அடுத்த ஆண்டில் 80 ஆயிரத்து 464 கோடியே 35 லட்சம் ரூபாவாக உயருகின்றது.

### துண்டு விழும் தொகை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரிக்கும்...

பாதுகாப்புச் செலவினத்தை இரட்டிப்பாக்கியதன் காரணமாகவே, நாட்டின் மொத்தச் செலவினம் அடுத்த ஆண்டில் இவ்வாறு எக்கச்சக்கமாக எகிறியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள அவதானிகள், இதன் காரணமாக வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரிக்கும் என்றும் அச்சம் தெரிவித்தனர்.

துண்டு விழும் தொகையை இட்டு நிரப்புவதற்கு அரசு என்ன வழிவகைகளை வைத்திருக்கின்றது என்பதும் தெரியவில்லை என அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த வருடம் பொலிஸ் திணைக்களம் தனியான அமைச்சின் கீழ் இருந்தது என்றும் அது இம்முறை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதால், பொலிஸ் திணைக்களத்தின் செலவினமும் சேர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செலவினம் கூடிவிட்டது என்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆர்.ஏ.ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்துக்கு 2007 இல் 2 ஆயிரத்து 628 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கான சுமார் 14 ஆயிரம் கோடி ரூபா செலவின ஒதுக்கீட்டில் இதுவும் அடங்குகின்றது.

பாதுகாப்புச் செலவினம் இரட்டிக்கப்பட்டமையும், நாட்டின் மொத்தச் செலவினம் ஒரேயடியாக நாற்பது வீதம் அதிகரிக்கப்பட்டமையும் எதிர்பாராதவை என சில பொருளியல் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பெரும் யுத்தமொன்றை எதிர்கொள்வதற்கு அரசு தன்னைத் தயார்படுத்துகிறது என்பதையே பாதுகாப்புச் செலவினம் ஒரேயடியாக இவ்வாறு இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டமை காட்டுகின்றது என்று கூறும் அவதானிகள், நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் சமாதான முயற்சிகள் ஆரோக்கியமான திசையில் முன்நகராவிட்டால் யுத்தம் எவ்வாறு தவிர்க்க முடியாததாகுமோ, அதேபோன்று நாடு பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொள்வதும் தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே, நாட்டின் பணவீக்கம் 11.2 வீதம் என்ற நிலையை அடைந்திருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். வெளிநாட்டு முதலீடுகள் நாட்டின் யுத்த சூழ்நிலையால் பெரு வீழ்ச்சி அடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

உத்தேச மதிப்பீட்டு அறிக்கையின்படி - பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்தபடியாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சுக்கு 10 ஆயிரத்து 366 கோடியே 28 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சமய விவகார அமைச்சின் கீழ் வரும் புத்தவிவகார திணைக்களத்துக்கு 41 கோடியே 42 லட்சத்து 32 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கடுத்தபடியாக முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்துக்கு 13 கோடியே ஆறு லட்சத்து ஐயாயிரம் ரூபாவும், இந்து சமய விவகாரத் திணைக்களத்துக்கு ஆறு கோடியே 19 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ விவகார திணைக்களத்துக்கு இரண்டு கோடியே 21 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்குப் பொறுப்பான மீள்குடியேற்ற அமைச்சுக்கு 263 கோடியே 34 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்காக இறுதியாக உருவாக்கப்பட்ட இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 87 கோடியே 47 லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பெ.சந்திரசேகரனின் சமுதாய அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சுக்கு 21 கோடியே ஐந்து லட்சத்து 99 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## இன்று நடக்கும் சிறுவர் தினவிழா

நவாலி, ஒக்.6

ஆனைக்கோட்டை கூழாவடி சிறுவர் கழகத்தினர் நடத்தும் சிறுவர் தினவிழா இன்று 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.பகல் 10 மணிக்கு ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். (ப-100)

## சமய சந்நிதி

கல்வியங்காடு, ஒக்.6

திருநெல்வேலி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தில் பூரணை தின விசேட பூசை வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 2.45 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பிக்கும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கௌரி பூசை இயந்திர பூசை மற்றும் வசந்த மண்டப பூசை இடம்பெற்று மாலை 4.30 மணிக்கு அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## செயலமர்வுகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினால் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடத்தப்படவிருந்த அனைத்துச் செயலமர்வுகளும் பிற்போடப்பட்டுள்ளன என யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வுகள் இடம்பெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (1)

## வடமராட்சி கிழக்கு ஆசிரியர்கள் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு

வடமராட்சி, ஒக்.6

வடமராட்சி கிழக்கு இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக வடமாராட்சி வலயத்தைச் சேர்ந்த ஏனைய பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி முதல் முகமாலைப் பகுதியின் ஊடான இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கான ஏ-9 பாதை மூடப்பட்டதைத் தொடர்ந்து அங்கு கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் கடமைக்குச் செல்லமுடியாதுள்ளது.

இதனைத்தொடர்ந்து இவர்கள் அனைவரும் வடமராட்சி வலயத்திலுள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளனர். (1-173)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.6

பெரியகடை ஷன்பிளவர் சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை வண்ணை வெங்கடேஸ்வரர் ஆலய லக்ஷ்மி நாராயணன் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாநகரஆணையாளர் செ.மு.சரவணபவ கலந்துகொள்வார்.

விழி, சொண்ட், சிறுவர் பாதுகாப்பு நிதியம், வேல்ட்விஷன் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் இந்நிகழ்வு இடம்பெற வுள்ளது. (1)

## மருத்துவமாது பதவிக்கான நியமனக்கடிதங்களை பெறுமாறு வலியுறுத்து

குருநகர், ஒக்.6

குடும்பநல மருத்துவ மாதுபரீட்சை 2004 ஏ தொகுதியில் தோற்றி சித்தியடைந்துள்ள 39 மாணவிகளுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந் நியமனக்கடிதங்களை அன்று மதியம் 12மணிக்கு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தில் வந்து பெற்றுச்செல்லுமாறு இம்மாணவிகளை யாழ்.பிரதிமாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (1-51)

## புத்தளத்தில் 33 பேர் கைது

கொழும்பு, ஒக்.6

புத்தளம் வென்னப்புவ பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 23 தமிழ் இளைஞர்கள் உட்பட 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரை இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக வென்னப்புவ பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிகம்பல, வயாகல, போகாவத்த, தம்பரவில ஆகிய பகுதிகளில் பொலிஸார் தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட 33 பேரில் 23 பேர் தமிழர்கள் ஆவர். அவர்கள் வவுனியா, புசல்லாவ, நுவரெலியா, ஹட்டன் ஆகிய பகுதியிலிருந்து வந்து வென்னப்புவ பகுதியில் வசிப்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இந்த 33 பேரில் 31 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களைத் தாங்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளனர் என்று வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)



கொழும்புக்கு வெளியே லுனுகம்வெஹர என்ற இடத்திற்கு சென்றுவிட்டு, அங்கிருந்து ஆசிரியர்தின நிகழ்வில் கலந்துகொள்வதற்கென கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு சென்றுகொண்டிருந்தார் ஜனாதிபதி. அப்போது காலநிலை சீரின்மை காரணமாக இடைவழியில் - சீனிகம என்ற இடத்தில் - பயணத்தை இடைநிறுத்தி, அப்பகுதியிலுள்ள விமலபூதி மகாவித்தியாலயத்திற்குச் சென்று அங்குள்ள ஆசிரியர்களுடன் சிறிது நேரம் உரையாடினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### ஆசை முருகேசு

நிற்சாமம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசை முருகேசு நேற்று (05.10.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளையின் அருமைக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், நாகமுத்து மற்றும் சோதிராசா, அன்னம் ஆகியோரின் சகோதரரும் நாகேசுவரநாதன், யோகதீஸ்வரி, விமலராசா, உதயகுமார், இராசகுமார், பவானிதேவி, திருமகள், கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லீலாதேவி, தர்மலிங்கம், யோகராணி, ராணி, கமலாதேவி, பழனிராசா, குணபாலசிங்கம், பாமினி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.10.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வினாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிற்சாமம்,*
*சங்கானை.*

தகவல்:
குடும்பத்தினர்.

'செஞ்சோலை' குண்டுவீச்சில் காயமடைந்து

# சிகிச்சையின் பின் உயிரிழந்த சிறுமியின் உடலை வவுனியாவில் புதைக்க உத்தரவு

கொழும்பு, ஒக்.06

முல்லைத்தீவு செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீதான விமானத் தாக்குதலில் காயமடைந்து பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவேளை மரணமான மாணவியின் சடலத்தை வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அடக்கம் செய்யவேண்டும் என வவுனியா நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

படுகாயமடைந்த மாணவி கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளையில் மரணமானார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் வவுனியா வைத்தியசாலையில் இருந்து காரணம் எதுவுமின்றி சடலம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சமயக்கிரியைகளை மேற்கொள்வதற்காக மாணவியின் சடலத்தை அவருடைய சொந்த இடமான விசுவமடுவிற்கு கொண்டுசெல்வதற்கும் பின்னர் அங்கிருந்து எடுத்து வந்து வவுனியா இந்து மயானத்தில் அடக்கம் செய்வதற்கும் ஏற்பாடு செய்யுமாறு வவுனியா நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-12)

# குழுக்களின் பிரதித் தலைவராக சந்திரசேகரன் தெரிவு

கொழும்பு, ஒக். 06

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவராக ஜே. வி.பியின் தேசியப்பட்டியல் எம்.பியான இராமலிங்கம் சந்திரசேகரன் போட்டியின்றி நேற்று நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதுவரை குழுக்களின் பிரதித் தலைவராக தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த பியசிரி விஜேநாயக்கா (ஜே. வி. பி) தமது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து அந்த வெற்றிடத்துக்கு நேற்று சபையில் தெரிவு இடம்பெற்றது.

இராமலிங்கம் சந்திரசேகரனின் பெய[ரை] ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ெ[பாதுச்] செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமெ[ஜயந்த] முன் மொழிந்தார். ஜே. வி. பி. நாடாளு[மன்றக்] குழுத்தலைவர் விமல் வீரவன்ஸ எ[ம்.பி.] வழிமொழிந்தார்.

எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து குழு[க்களின்] பிரதித் தலைவர் பதவிக்கு எந்தப் பெயர்களும் முன்வைக்கப்படாததால் இராமலிங்கம் சந்திரசேகரன் இப்பதவிக்கு ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார் என்று சபாநாயகர் தெரிவித்தார். (க)

# சிகரெட், மதுபானம் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.06

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவற்றுக்கு அறவிடப்படும் வரியை அதிகரிப்பதன் மூலம் அவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று நிதி திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின்கீழ் மதுபானம், போதைப்பொருள்கள் என்பவற்றின் பாவனையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# வவுனியா கிளைமோரில் சிப்பாய் மரணம்

கொழும்பு, ஒக்.6

வவுனியா கொக்கல வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். 2 இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 7.35 மணியளவில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

# புலிகளுக்காக உளவு பார்த்தாராம் சாவகச்சேரி வாசிக்கு தடுப்புக் காவல்

கொழும்பு, ஒக். 06

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்தார் என்று தெரிவித்து குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட தமிழ் இளைஞரைத் தொடர்ந்து தடுப்புக்காவலில் தடுத்துவைத்து விசாரிக்கக் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள திலகரட்ண இந்த அனுமதியை நேற்று வழங்கினார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை திருச்செல்வம் என்பவரைத் தடுப்புக் காவலில் வைக்கவே நீதிமன்றம் அனுமதித்தது.

நாடாளுமன்றுக்கும் கல்வி அமைச்சு அமைந்துள்ள இசுறுபாயவுக்கும் இடையில் உள்ள பகுதியில் சலூன் ஒன்றை நடத்திவரும் சாக்கில், அங்கிருந்தபடி இவர் புலிகளுக்கு துப்பு வழங்கி வந்தார் என்றும் -

இவரிடமிருந்து தற்கொலைத் தாக்குதலுக்கான அங்கி ஒன்றும் மற்றும் கல்வி அமைச்சுத் தொடர்பான போலியான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் -

குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் தெரிவித்தனர். (க)

# டீசல், பெற்றோல் விலை உடனடியாகக் குறைப்பு

கொழும்பு, ஒக். 06

உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் டீசல் மற்றும் பெற்றோலின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று நிதித்திட்டமிடல் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

டீசல் லீற்றர் ஒன்றுக்கு இரண்டு ரூபா 50 சதத்தாலும், பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு இரண்டு ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன என்று நிதி திட்டமிடல் அமைச்சு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

வாழ்க்கைச் செல[வை]க் கட்டுப்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் விலைகள் குறைக்கப்படுகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 தினங்களில் டீசல், பெற்றோல் என்பவற்றின் விலைகள் இரண்டாவது தடவையாகக் குறைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

# 'டயனமைற்' கூர்களுடன் கைதான ஆறுபேரின் தடுப்புக் காவல் நீடிப்பு

'டயனமைற்' கூர்களுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் எனக் கருதப்படும் - தமிழர்கள், சிங்களவர்கள் உட்பட - ஆறுபேரைத் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த ஆறுபேரையும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள திலகரட்ண முன்னிலையில் ஆஜர்செய்தபோது அவர் மேற்படி அனுமதியை வழங்கினார்.

இவர்கள் அனைவரையும் கடுவெல, நவகமுவ, பத்தினி தேவாலயப் பகுதியில் லொறியொன்றில் 681 டயனமைற் கூர்களுடன் தாங்கள் கைதுசெய்தனர் என்று நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

# ஏ-9 பாதையைத் திறந்து வடக்கில் சகஜ நிலையை ஏற்படுத்துங்கள்!

## நாடாளுமன்றத்தில் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஒக். 06

"கொழும்பில் தமிழர்கள் கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், மூடப்பட்டிருக்கும் ஏ-9 பாதையைத் திறக்கவும், சமாதானப் பேச்சைத் தொடங்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றில் மேற்கொண்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு உரிய பதிலையும் அரசு வழங்கவேண்டும்."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் எம்.பியும், பிரதி அமைச்சருமான இராதாகிருஷ்ணன் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழர்கள் கொழும்பில் மிகவும் அச்சத்துடன் வாழ்கின்றனர். நாம் கடத்தப்படுவோமா எனத் தமிழ் வர்த்தகர்கள் அஞ்சுகின்றனர்.

கடத்தலுடன் தொடர்புபட்ட ஒருவர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டார். அவர் இப்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் கருணா குழுவைச் சேர்ந்தவர் எனக்கூறியுள்ளார்.

இவர் உண்மையில் கருணாகுழுவைச் சேர்ந்தவரா அல்லது கருணாவின் பெயரைப் பயன்படுத்தி வேறு சிலர் இந்தக் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனரா என்று கேட்கின்றோம். எப்படி இருப்பினும் இக்கடத்தல் நடவடிக்கை நிறுத்தப்படவேண்டும். இதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும்.

அத்தோடு, இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் மேற்கொண்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை அரசு கவனத்தில்எடுக்கவேண்டும். இவர்களுக்கு ஒரு நல்ல பதிலை அரசு தெரிவிக்கவேண்டும்.

அரசு ஏ-9 பாதையைத் திறந்து யாழில் பட்டினியால் வாடும் மக்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும். மக்களைப் பட்டினிபோடவோ, அவர்கள்மீது குண்டுபோடவோ அரசு முன்வரக்கூடாது.

சமாதானத்தை உருவாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். சமாதானத்திற்குத் தடையாகவிருக்கின்ற சக்திகளை ஜனாதிபதி நிராகரிக்கவேண்டும் - என்றார். (க)

# ஒக். 28 - 29 இல் சுவிற்ஸர்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அனைத்து பயங்கரவாத நடவடிக்கைகளையும் கைவிட வேண்டும்.

- அரசாங்கம் எப்போதும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மதித்தே நடந்துள்ளது. -

- பொறுப்பான அரசாங்கம் என்ற வகையில் இனியும் அவ்வாறே தொடர்ந்து செயற்படும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்போதாவது யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டால் அதற்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் உரிமை அரசுக்கு உண்டு என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசின் நிலைப்பாட்டை புலிகளிடம் தெரிவித்த பின்னர் இது தொடர்பான அவர்களின் கருத்தை இன்னும் சில நாள்களில் அரசுக்குத் தெரிவிப்பதாக நோர்வே சிறப்புத் தூதர் உறுதியளித்தார் என்று அரச தகவல் திணைக்களச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பி.பி.சி. சிங்கள சேவையான சந்தேசியவுக்கு அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொஹென்ன கூறியிருப்பதாவது:-

நோர்வே அனுசரணையாளர்கள் தெரிவித்த யோசனைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. பேச்சுக்களை எதிர்வரும் 28ஆம் திகதி அல்லது 29ஆம் திகதி சுவிற்ஸர்லாந்தில் நடத்தலாம் எனத் தெரிவித்துள்ளோம்.

ஐக்கிய மற்றும் பிளவுபடாத இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு அளிக்க அரசு விரும்புகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திடமிருந்து "செய்தி"யை நோர்வேத் தரப்பினர் கொண்டுவந்தனர் - என்றார் அவர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அனுசரணையாளர்களை திங்கட்கிழமை சந்திக்கவுள்ளோம். பேச்சுக்கான நாள் மற்றும் இடம் என்பவற்றை அனுசரணையாளர்களே தீர்மானிப்பர் - என்று கூறினார். (ஐ-12)

# சு.க. - ஐ.தே.க பேச்சுகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சின்போது ஆறு விடயங்கள் இனங்காணப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதென இரு கட்சிகளும் இணங்கியுள்ளன. அது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் கைச்சாத்திடப்படும்.

இந்த இணைவானது இந்த நாட்டுமக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் என்பதில் ஐயமில்லை - என்றும் பிரதமர் தெரிவித்தார்.

### கருஜயசூரிய

ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கருஜயசூரிய கூறியதாவது:-

நாட்டின் நலன்கருதி நாம் இணைந்து செயற்படுவதற்கென முடிவெடுத்துள்ளோம். இரு கட்சிகளிடையே இடம்பெற்ற மூன்று சுற்றுப் பேச்சு வெற்றியளித்துள்ளதைத் தொடர்ந்து இந்த இணைவை நாம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கின்றோம். இந்த இணைவானது இந்த நாட்டுக்கு உச்சப்பயனைப் பெற்றுக்கொடுக்கும். இப்பேச்சுக்களின்போது எட்டப்பட்ட முடிவுகளை நாம் எமது கட்சிகளின் செயற்குழுவிற்கும், நாடாளுமன்றக் குழுவிற்கும் சமர்ப்பிப்போம்.

இரு கட்சிகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவிருப்பதானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவொரு விடயமாகும். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வுக்கு அனைவரையும் நாம் அழைக்கவிருக்கின்றோம் - என்றார்.

நேற்று நடந்த மூன்றாவது சுற்றுப்பேச்சில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் தலைமையில் அதன் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரட்ன ஆகியோரும், ஐ.தே.க. சார்பில் அதன் பிரதித்தலைவர் கருஜயசூரிய தலைமையில் எம்.பிக்களான, ரவிகருணாநாயக்க, மிலிந்த மொறகொட, ஜி.எல்.பீரிஸ், ருக்மன் சேனநாயக்க மற்றும் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மலிக் சமரவிக்ரம ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# அவசர காலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையக மக்கள் முன்னணியினர் வாக்கெடுப்புவேளையில் சபையில் இருக்கவில்லை. வாக்கெடுப்புக்கு முன் மலையக மக்கள் முன்னணியின் எம்.பியும், பிரதி முதலமைச்சருமான இராதகிருஷ்ணன் அவசரகாலச்சட்டம் மீதான விவாதத்திற்கு உரையாற்றிவிட்டு வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றம் மீண்டும் இம்மாதம் 17ஆம் திகதி கூடவுள்ளது. (ஐ-07)

# தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து அங்கு நின்று விவாதத்தில் பங்குகொண்டு உரையாற்றவும் தவறவில்லை. இரா.சம்பந்தன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பின்னர் மீண்டும் சபைக்கு நடுவே வந்து அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

# குடாநாட்டில் கைத்தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசி பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து மாதாந்தம் விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கும் பெருந்தொகை வருமானம் தடுக்கப்பட்டிருப்பதாகவும் அரசு கூறுகிறது.

இப்படி அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ்ப்பாணத்தில் கைத்தொலைபேசி பாவனையாளர் சிலருக்கு அவர்களது இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையிலும் சேவைக்கு அறவிடப்படும் வாடகை கட்டணத்துக்கான கட்டளைச் சிட்டைகள் கிடைத்துள்ளன என்று கூறப்பட்டது.

**படிவம்**
அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல்
2006-2007கல்வியாண்டு
முடிவுத்திகதி:16.10.06
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.